## தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

## நீர்க்குழாய்ப் பணியாளர்களுக்கான தொழிற்திறன் புத்தாக்க கற்கைநெறி

## விபரப் பத்திரம்

விண்ணப்பப்படிவத்தை நிரப்புவதற்கு முன்னர் இந்த விபரப்பத்திரத்தை வாசிக்கவும்.

### தெரிவு செய்யும் முறை

A) சகல விண்ணப்பதாரர்களும் விண்ணப்பத்திகதிக்கு 40 வயதை விட குறைவாக இருத்தல் வேண்டும்.

B) நீர்க்குழாய் பணிசார் துறையில் தேசிய தொழிற் தகைமை மட்டம் 3 அல்லது 4 (NVQ) இனை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

C) தங்களினால் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களுக்கு ஏற்ப அதிகமான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் வரிசை கிரமத்திற்கு அமைவாக ஆட்சேர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### விண்ணப்பப்படிவத்தை அனுப்புதல்

**A)** விண்ணப்ப முடிவுத் திகதி **18.01.2021**

B) தாங்கள் நீர்க்குழாய் பணிசார் துறையில் முழு நேர மற்றும் பகுதி நேர தொழிலில் ஈடுவடுவதாயின் அவ்விடயத்தை உறுதிப்படுத்துவதற்காக, முழு நேரமாயின் தாங்கள் சேவையாற்றுகின்ற நிறுவனத்தின் தலைவரினால் அல்லது பிரிவுத் தலைவரினால் மற்றும் பகுதி நேரமாயின் தாங்கள் குடியிருக்கின்ற பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட கடிதமொன்றினை தங்களது விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

C) பூரணப்படுத்தப்படாத மற்றும் தேவையான ஆவணங்கள் இணைக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். **“விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்”** என்ற பகுதியை விண்ணப்பப்படிவத்துடன் கட்டாயமாக இணைத்து அனுப்பவும். தங்களை இக்கற்கைநெறியின் நிமித்தம் பதிவு செய்வது **சான்றிதழ் பத்திரங்களை பரிசீலனை** செய்து பார்த்ததன் பின்னராகையினால், விண்ணப்பப்படிவத்துடன் அனைத்து சான்றிதழ்களினதும் பிரதிகளை தாங்கள் பணியாற்றுகின்ற பிரிவுத் தலைவர்/கிராம உத்தியோகத்தர்/சமாதான நீதவான் ஒருவரினால் உறுதிப்படுத்தி சமர்ப்பித்தல் கட்டாயமாகும் என்பதை கருத்திற்கொள்ளவும்.

D) முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை கீழ் காணப்படும் முகவரிக்கு அல்லது மின்னஞ்சல் முகவரி ஊடாக கிடைக்கப்பெறுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவும். விண்ணப்பப்படிவத்தை அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“நீர்க்குழாய்ப் பணியாளர்களுக்கான தொழிற்திறன் புத்தாக்க கற்கைநெறி”** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**விண்ணப்பப்படிவங்களை அனுப்ப வேண்டிய முகவரி :-**

உதவிப் பொது முகாமையாளர்,

மனிதவலு அபிவிருத்தி மற்றும் பயிற்சியளிப்பு பிரிவும்,<br>
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை,<br>
தெலவல வீதி,<br>
இரத்மலானை.

**மின்னஞ்சல் முகவரி :-**

srilankaplumber@gmail.com

**<u>கற்கைநெறி நடைபெறும் முறை</u>**

A) இக்கற்கைநெறி சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் நடாத்தப்படும். எனவே, கற்கைநெறியை தொடர்வதற்கு விரும்பும் மொழி மூலத்தை வலது பக்க மேல் மூலையிலுள்ள கூட்டில் ✓ அடையாளத்தை இட்டு தெரிவிக்கவும்.

B) இக்கற்கைநெறியானது கோட்பாடு மற்றும் செயல்முறை எனும் இரு பிரிவுகளைக் கொண்டுள்ளதுடன் கற்கைநெறி நடாத்தப்படும் மொத்த காலம் 03 வாரங்கள் ஆகும். தெலவலை வீதியில் அமைந்துள்ள தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின், மனிதவலு அபிவிருத்தி மற்றும் பயிற்சியளிப்பு பிரிவில் மற்றும் சில செய்முறை பகுதிகள் கண்டி, கடுகஸ்தொட்டையில் அமைந்துள்ள தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின், பயிற்சியளிப்பு வளாகத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

C) இரத்மலானை, பயிற்சியளிப்பு பிரிவில் குறித்த கற்கைநெறி நடாத்தப்படும் இக்காலப்பகுதியில் தாங்களுக்கு பகல் உணவு வழங்கப்படும். அத்துடன் கண்டி, கடுகஸ்தொட்டையில் அமைந்துள்ள தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின், பயிற்சி வளாகத்தில் குறித்த கற்கைநெறி நடாத்தப்படும் இக்காலப்பகுதியில் சகல உணவுகள் சகிதம் தங்குமிட வசதியும் வழங்க முடியும்.

**<u>கற்கைநெறிக்குரிய நிபந்தனைகள்:</u>**

A) கற்கைநெறியின் முடிவில் நடாத்தப்படும் எழுத்துமூல மற்றும் செய்முறைத் தேர்வுகளுக்கு சமூகமளிப்பதற்காக தாங்கள் குறைந்தளவு 14 நாட்கள் பயிற்சிக்கு சமூகமளித்திருத்தல் வேண்டும்.

B) எழுத்துமூல மற்றும் செயல்முறை தேர்வுகளில் தனித்தனியாக ஒவ்வொரு பிரிவிலும் 60 புள்ளிகள் அல்லது அதை விட அதிகமான புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு இணைந்து வழங்குகின்ற சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு மற்றும் துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நன்மைகளை அடைந்துகொள்வதற்கான உரித்து கிடைக்கப்பெறும்.

## <u>தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை</u>
## <u>நீர்க்குழாய்ப் பணியாளர்களுக்கான தொழிற்திறன் புத்தாக்க கற்கைநெறி</u>

**<u>விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:</u>**

(தங்களினால் சமர்ப்பிக்கப்படும் சான்றிதழுக்கு முன்னாலுள்ள கூட்டில் ✓ அடையாளத்தை இடவும். இப்பக்கத்தை பூர்த்தி செய்து விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்)

01. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்பத்திரம் ☐

02. உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையின் நிழற் பிரதி ☐

03. உறுதிப்படுத்தப்பட்ட தேசிய தொழிற் தகைமை (NVQ) மட்டத்தை பெற்றுக்கொண்டுள்ள சான்றிதழின் நிழற் பிரதி ☐

04. நீர்க்குழாய் பணியாளராக பெற்றுக்கொண்டுள்ள அனுபவம் சம்பந்தமான சான்றிதழ்/ சான்றிதழ்கள் ☐

05. கடமையிலிருந்து விடுவிக்க முடியும் என நிறுவனத் தலைவரின் பரிந்துரை (இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தை உபயோகிக்கவும்)/ கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் ☐

06. ஏனைய சான்றிதழ்கள் ☐

விண்ணப்பதாரரின் பெயர் ............................................

கையொப்பம் ............................................

திகதி ............................................

……………………………………

……………………………………

……………………………………

……………………………………

திகதி: ………………………………

உதவிப் பொது முகாமையாளர் (மஅமப),
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை,
தெலவல வீதி, இரத்மலானை.

ஐயா/அம்மையீர்,

**<u>நீர்க்குழாய்ப் பணியாளர்களுக்கான தொழிற்திறன் புத்தாக்க கற்கைநெறி</u>**

தங்களது நிறுவனத்தினால் தேசிய தொழிற் தகைமை (NVQ) மட்டத்தை பூர்த்தி செய்துள்ள நீர்க்குழாய் பணியாளர்களுக்காக நடாத்தப்படும் புத்தாக்க கற்கைநெறிக்கு சமூகமளிப்பதற்காக எமது நிறுவனத்தில் பணியாற்றுகின்ற …………………………………………….. அவர்களை 03 வாரத்திற்கு கடமையிலிருந்து விடுவிப்பதற்கு இணங்குவதாக அறியத்தருகின்றேன்.

அவ்வாறே, குறித்த ஊழியர் உரிய காலப்பகுதியினுள் கற்கைநெறிக்கு சமூகமளித்துள்ளமை சம்பந்தமாக உறுதிப்படுத்தி கடிதமொன்றின் மூலம் எனக்கு அறிவிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

…………………………………..

நிறுவனத் தலைவர்/ பிரிவுத் தலைவர்
(பதவி முத்திரை)